முனைவர். ம. இராசேந்திரன்
துணைவேந்தர்

மின் அஞ்சல் : maran.tamil@gmail.com
இணைய தளம் : www.tamiluniversity.ac.in



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 613 010 – தமிழ்நாடு – இந்தியா

அலுவலகம் : 04362-227040 இல்லம் : 226741
நிகரி : 226159

தேசியத்தர மதிப்பீடு மற்றும் மதிப்பேற்றுக் குழுவின் B++ மதிப்பேறு பெற்றது Accredited by National Assessment and Accreditation Council with B++ Grade

**செய்தி வெளியீடு எண். 606** **நாள்– 21.07.2010**

**கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையம்**
**தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொடங்க**
**மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறை,**
**பல்கலைக்கழக மானியக்குழு வழி**
**இரண்டு கோடி ரூபாய் நிதியுதவி**

உலகம் வியக்கவும் உலகத் தமிழர்கள் உவப்பவும் கோவையில் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** நடத்திய உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் விளைவாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் **கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையம்** தொடங்கிட மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை, பல்கலைக்கழக மானியக்குழு வழி (யூ.ஜி.சி.) இரண்டு கோடி ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்** தமிழ்ச் செம்மொழி இலக்கண இலக்கியங்களில் கொண்டுள்ள நீண்டகால ஈடுபாட்டையும், இவற்றை மக்கள் மன்றத்திற்கு எடுத்துச் சென்ற பாங்கினையும், தமிழ் வளர்ச்சிக்குத் தொடர்ந்து ஆற்றிவரும் தொண்டினையும் போற்றும் வகையிலும், தமிழுக்குச் செம்மொழி ஏற்பினைப் பெற்றுத் தந்தமைக்கு நன்றிபாராட்டும் வகையிலும் தஞ்சையில் உள்ள தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் **கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையம்** நிறுவப்படத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் பேரவையில் (செனட்) தீர்மானம் நிறைவேற்றப்பெற்றுப் பல்கலைக் கழக மானியக் குழுவிற்குக் (யூ.ஜி.சி.) கோரிக்கை வைக்கப்பெற்றது.

உலகச் செம்மொழிகளாக விளங்குகின்ற தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சீனம், அரபு ஆகிய செம்மொழிகளைக் கற்றுத்தருதல், செம்மொழிகளின் மொழி, இலக்கியம், இலக்கணம் தொடர்பாக ஒப்பிலக்கிய ஒப்பிலக்கண ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், இலக்கண இலக்கியங்களை மொழிபெயர்த்தல், உலகச் செம்மொழிப் பண்பாட்டுக் களஞ்சியம், உலகச் செம்மொழி வரலாற்றுக் களஞ்சியம், உலகச் செம்மொழி இலக்கியங்களில் இடம்பெறும் வாழ்வியல் மதிப்பீடுகளைக் கொண்ட பொன்மொழிக் களஞ்சியம், பன்மொழி அகராதி ஆகியவற்றைத் தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்குத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் **கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையம்** தொடங்கிட மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை, பல்கலைக்கழக மானியக்குழு வழி இசைவும் நிதியுதவியும் வழங்கியுள்ளது.

இந்தியாவில் மொழிகளுக்கென்று தனித்தனியே பல்கலைக்கழகங்கள் உள்ளன. எனினும் உலகச் செம்மொழிகளான தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சீனம், அரபு ஆகிய மொழிகளைக் கொண்டதாகத் தனித்துறையோ மையமோ எந்தப் பல்கலைக்கழகத்திலும் இல்லை.

**கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையத்தில்** தமிழ், வடமொழி, கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சீனம், அரபு ஆகிய மொழிகளுடன் ஆங்கில மொழிக்கும் சேர்த்து ஒவ்வொரு மொழிக்கும் பேராசிரியர் ஒருவர், இணைப் பேராசிரியர் ஒருவர், உதவிப் பேராசிரியர் ஒருவர் என்று மொத்தம் பேராசிரியர்கள் 8 பேர், இணைப் பேராசிரியர்கள் 8 பேர், உதவிப் பேராசிரியர்கள் 8 பேர் என 24 கல்வியாளர்கள் இடம் பெறுவர்.

கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையத்திற்குத் தமிழில் முனைவர் பட்டமும் மற்ற செம்மொழி ஒன்றில் பட்டமும் பெற்றவர் இயக்குநராக இருப்பார்.

உலகில் எங்கும் இல்லாத, ஆனால் தேவையான இன்றியமையாத இந்த உயர் ஆய்வு மையம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் அமைவது தமிழுக்கும் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்திய கையோடு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க **கலைஞர் உலகச் செம்மொழிகள் உயர் ஆய்வு மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்** வரும் 27.7.2010 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்குத் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தொடங்கிவைக்கிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.**